சூரிய காந்தி
SOORIYA GANDHI
விலை ரூபா 5-00
மலர் 1 சனிக்கிழமை 7 - 2 - 1998 இதழ் 6

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# விமானபடை தலைமை அருகில் தற்கொலைக் குண்டுத் தாக்கு!

## விமானப்படை உட்பட ஒன்பது பேர் பலி

நேந்று மாலை 5 - 05 மணிச்கு விமானப்படை தலைமையகத்துக்கு அருகில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தனது உடலில் சட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்தார். இத் தாக்குதலில் நான்கு விமானப்படையினர் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

கொம்பனி தெருவில் இருந்து மலே வீதியில் 200 மீற்றர் தூரந்தில் அமைந்த பாதுகாப்பு சோதனை சாவடிக்கு அருகே நேற்று மாலை 5. 05 மணிக்கு பெண் தற்கொலை தாக்குதல் தாரி உடலில் வத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

இத்தற்கொலை தாக்குதலின் போது ஸ்தலத்தில் அப் பெண் தற்கொலை தாரி கொல்லப்பட்டதுடன் இரண்டுவிமான்ப்படை ஆண்களும் நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ரோது அதில் படுகாயம் அடைந்த விமானப்படை பெண் வைத்தியசாலையில் மரணம் அடைந்தார்.

மிகவும் இறுக்கமாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## 'தற்கொலையாளியின் இலக்கு இச் சோதனை சாவடி அல்ல'

### விமானப் படை அதிகாரி

(கொழும்பு)

தற்கொலை குண்டுதாரி இலக்கு வைத்து புறப்பட்டது இந்தச் சோதனைச் சாவடியை அல்ல எனத் தாங்கள் கருதுவதாக விமானப்படை சார்பில் கருத்து தெரிவித்த உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் எதிர்பாராத விதமாக இவர் சோதனைச் சாவடியில் சோதனைஇடப்பட நேர்ந்ததால் இவர் தற்கொலைக் குண்டை வெடிக்கவைத்த போது இவருடன் வாகனத்தில் வந்த மேலும் இருவரும் பலியானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தற்கொலை குண்டு வெடிப்பின் எல்லா அம்சங்களையும் கவனிக்குமிடத்து இது விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்றேஎண்ணத்தோன்றுகின்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெண்தாமரை தலைவராகபெண்

(கொழும்பு)

வெண்தாமரை இயக்கத்தின் யாழ். மாவட்ட தலைவராக பெண்மணியொருவர் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக சுதந்திரக்கட்சிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

இதுரை காலமும் இவ்இயக்கத்தின் தவைர்ராக இருக்கும் மங்களநேசன் உள்ளூர்ாட்சித் தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எப். சார்பாக யாழ், மாநகர சபைக்கு போட்டியிட்டதைத் தொடர்ந்து இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக அக் கட்சி வட்டாரம் மேலும் தெரிவிக்கின்றது.

## தற்கொலை குண்டுதாரியின் வாகன தடயங்கள் சேகரிப்பு

(கொர்ழும்பு)

சிதறிய கண்ணாடித் துண்டுகள் மற்றும் பொருட்ள் எங்கும் வீசப்பட்டு கிடப்பதாக பொலீசார் அந்த வட்டார த்தை எவரும் உட் செல்லாதவாறு மூடி வைத்திருப்பதாக செய்திகள தெரிவிக்கின்றண'

தற்கொலை குண்டுதாரி வந்ததாக கருதப்படும் மோட்டார் வாகனத்தின் தடயங்களை பொலிஸ் பிரிவு வெடிகுண்டு நிபுணர்களும், இராணுவ வெடிகுண்டு நிபுணர்களும் சேகரித்த வண்ணம் இருப்பதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## பஞ்சாபி உடையணிந்த பெண் தற்கொலையாளி

(கொழும்பு)

கொழும்பு மையப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற தற்கொலை தாக்குதல் மேற்கொண்டபெண் பஞ்சாபி உடைஅணிந்து கையில்குடையொன்றையும் ஏந்தியவாறு அவ்வீதிவழியாக நடந்து சென்றதாக கொழும்புசெய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தற்கொலைப்பெண் வேறுஇலக்கைநோக்கிசென்றுகொர்ண்டிருந்ததாகவும் இவர் மீது சந்தேகம்கொண்டு இவரை சோதனை செய்வதற்கு அழைத்தபோது இவர் சோதனைசாவடியை அண்மித்து தன்னை சோதனை செய்ய முற்பட்ட பெண் இராணுவத்தினரை கட்டிப்பிடித்து தன் உடலில் இருந்த குண்டைவெடிக்க வைத்துக்கொண்டதாக அச்செய்திகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலையாளிகளை கட்டுப்படுத்த முடியாது

### ஹரய செய்தியாளர்

(கொழும்பு)

தற்கொலை குண்டு தாக்குதல் ஒன்று இருக்கும் வரை எந்த பாதுகாப்பு மையத்தை ஊடறுத்து தாக்குதல் மேற்கொள்வது எவ்வளவு பாதுகாப்பு கெடுபிடி இருந்தாலும் தடுக்க முடியாது என ஹரய பத்திரிகையின் மாத்தறை செய்தியாளர் பிலிப் திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கொழும்பு கொம்பனித்தெரு குண்டுத் தாக்குதல் தொடர்பாக பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில் பிலிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

மிதிவண்டிகள், பெயின்ற் வகைகள், இரும்பு கட்டடப் பொருட்கள்,
தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், மிதி வண்டி உதிரிப்பாகங்கள்,
வானொலிப் பெட்டிகள் என்பன
மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஒரே ஸ்தாபனம்

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மலையக இளைஞர்கள் புலிகளிடம் பயிற்சி

(கொழும்பு)

மலையகத்தில் விடுதலைப் புலிகளின் இரண்டு அணிகள் ஊடுருவி இருப்பதாகவும் தற்போது இவர்கள் மலையகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மலையக இளைஞர்கள் அண்மையில் காணாமல் போயுள்ளதாகவும், இவர்கள் விடுதலைப் புலிகளின் முகாம்களில் பயிற்சி பெற்றுக் கொள்வதாகவும், விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதிகளின் தற்கொலை குண்டு தாரிகளாக இவர்களை பயன் படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

மலையகத்திற்கு ஊடுருவிய புலிகள் அணி இரண்டிலும் சிங்களம் தெரிந்த இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் தேயிலை பெட்டிக்குள் ஒளிந்து கொழும்புக்கு ஆட்களை எடுத்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கண்களைப் பிசைந்தவாறு சார்ள்ஸ் விடைபெற்றார்

(கொழும்பு)

கண்களை கசக்கியவாறு பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் இலங்கையைவிட்டு விடை பெற்றார்கட்டுநாயக்கா சர்வதேச பண்டாரநாயக்கவிமான நிலையத்தில் விமானத்தில் ஏறும்போது கைகளை அசைத்து கண்களை கசக்கி விடை பெற்றர்ர்.

இராணுவ இசைநிகழ்வு பிரிவினர் தேசிய கீதத்தை இசைக்க இருபத்தியொரு மரியாதைக்குண்டுகள் தீர்க்க நேற்றுதனது இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்தார்.

இராணுவ விஷேட கொமாண்டோ படையினர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை பாதுகாத்தனர். விமான நிலைய வெளிவீதிகளில் தனியார் வாகனங்கள் உட்செல்லவோ வெளிச்செல்லவோ அனுமதி வழங்கப்படவில்லை.

## அரசின் நிதிநெருக்கடியை ஈடுசெய்யவே யாழ். தேர்தல்

வடபகுதியில் இன்னமும் சிவில் நிர்வாகம் ஏற்படவில்லை எனக்கூறி வெளிநாடுகள் சில இலங்கைக்கான தமது உதவிகளைக் குறைத்துள்ளன. இதனால் அரசு பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்குகிறது.

இந்நிதிநெருக்கடியை சமாளிப்பதற்காகவே அரசு வடபகுதியில் அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியுள்ளது வடபகுதியில் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். என வெளிநாடுகளுக்குக் காட்டி அவர்களிடமிருந்துநிதியைப்பெற்று நிதி நெருக்கடியை ஈடுகட்டுவதே அரசின் நோக்கம்.

## நகருக்குள் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி

(கொழும்பு)

சுதந்திரதின பொன் விழாவுக்குவருகைதந்த பிரதமவிருந்தினர் பிரிட்டிஸ் இளவரசர் சார்ள்ஸ்நாட்டைவிட்டுவெளியேறியதும் கொழும்பு நகரில் போடப்பட்டிருந்த கெடுபிடிகள் தளர்ந்து போக்குவரத்து உசார் அடைந்துள்ளது,

பாடசாலைகள் தொழிற்சாலைகள் அரச நிறுவனங்கள் வர்த்தக நிலையங்களில் வழமையான இயல்பு நிலை காணப்பட்டது. இதேவேளை நேற்று கொழும்பு நகருக்கு வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது,

இதனால் சொழும்பில் வாகனங்கள் பெருமளவில் காணப்பட்டன.

## சமாதான நீதிபதி

உடுப்பிட்டியைச்சேர்ந்த இளையவன் வல்லிபுரம் கடந்த திங்கட்கிழமை முதல் சமாதான நீதவானாகப்பதவியேற்றுள்ளார், யாழ். மாவட்ட நீதிபதி முன்னிலையில் இவர்சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். தற்போது மானிப்பாயில் வசித்து வரும் இவர் ஒருசமூகசேவகருமாவார்.

## ஜனாதிபதிக்கு ஐ.நா. பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் உண்மையான சமாதானம் ஏற்படுவதற்காக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா அவர்கள் கடுமையாக பாடுபடுகின்றார் என்று ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலர் கோபி அனான் பாராட்டியுள்ளார். இலங்கையின் சுதந்திரதின பொன்விழா கொண்டாட்டத்தை ஒட்டி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் வாழும் மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும் என்று அவ்வாழ்த்துச் செய்தியில் கேட்டுக்கொண்டார். வளர்ந்து வரும் நாடுகளுள் இலகங்யையின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் அதிகமாக உள்ளது என்றும் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழில் அபிவிருத்திதிட்டம்

யாழ்ப்பாணத்தில் தற்போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய இளைஞர் சேவை மன்றம் அறிவித்துள்ளது. வடமராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பகுதிகளில் இளைஞர்களுக்கான கைத்தொழில்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும். சங்கானை அரியாலை, பாஷையூர் போன்ற பகுதிகளில் இளைஞர் வேலைத்திட்டங்கள் புனரமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இத்தேசிய இளைஞர் மன்றத்தினால் யாழ் இந்துக் கல்லூரியில் இளைஞர்களுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பும் வடமராட்சியில் 5 இளைஞர் சேவை நூலகங்களும் நிறுவப்பட்டுள்ளன. யாழ்ப்பாண இளைஞர்களிடையே வானொலி திருத்தல், வீட்டு மின்சாரம் பொருத்துதல் போன்ற தொழிற் பயன்களை வழங்க முடிவு செய்துள்ளதாகவும் அம்மன்றம் அறிவித்துள்ளது.

## புனரமைப்பு நன்கொடை நிதி

சேதமுற்றிருக்கும் யாழ் மணிக்கூட்டுக் கோபுரத்தினை திருத்தம் செய்வதற்கு இளவரசர் சாள்ஸ்இனால் வழங்கப்பட்ட நிதியைப் பெற யாழ். மாநகர சபை ஆணையாளர் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவொன்றே கொழும்பு சென்றிருந்தது.

இக் குழுவில் யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், வண பிதா ஜெபநேசன் அடிகளார், மாவை சு.து.ஷண்முகநாதக் குருக்கள், திருமதி.ச.சிவசந்திரன் மற்றும் சென்ஜோன்ஸ் கல்லூரி' வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை அதிபர்களுடன்'மாணவன் ஒருவரும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மேன்முறையீட்டின் பின் நியமனம் பெற்றார்

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராக வணிகவியல் பட்டதாரியான திரு. ந. சரவணபவன் நியமனம் பெற்றுள்ளார். 1989-ம் ஆண்டு திரு. வி. ஆ. சிவராசா அவர்களைத் தலைவராகக்கொண்டிருக்கும் ''வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்'' மூலம் ஆசிரியர் நியமனம் வழங்கும்படி மேற்படி ஆசிரியர் ''கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம்செய்தபொழுது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட இவருக்கு ஆசிரியசேவை முன்பயிற்சியும் அளிக்கப்பட்ட போதிலும் ஆசிரிய நியமனம் கிடைக்கவில்லை.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிபற்றி கல்வியமைச்சு, மற்றும் வடக்குக் கிழக்கு மாகாண கல்விச் செயலர் முதலானோருக்கு முறையீடு செய்தும் பலன் ஏதும் கிட்டாத நிலையில் ''வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்மூலம்'' ஓம்புட்ஸ்மன் என்றழைக்கப்படும் குறைகேள் அதிகாரிக்கு மேன்முறையீடு செய்ததின் பிரகாரம் மாகாணக் கல்விச்செயலர், யாழ்ப்பாண கல்வி வலயப்பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து மேற்குறிப்பிட்ட ஆசிரியருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை என்பதைக் குறைகேள் அதிகாரி கண்டறிந்தார். இந்நியமனம் ஒரு அரசியல் பழிவாங்கல் என அறியப்பட்டு நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் சுமார் ஒன்பது ஆண்டுகளின் பின்னர் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யானை ஏலத்தில்

(கொழும்பு)

தெகிவளை மிருகக்காட்சிச் சாலையில் இரண்டு பாகன்களைக் கொன்ற ''ராஜா'' என்ற யானை நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நேற்றுக் காலை ஏலத்தில் விடப்பட்டது. இந்த யானையைத் தொடர்ந்தும் மிருகக் காட்சிச் சாலையில் வைத்திருந்தால் ஆபத்து அதிகரிக்கும் என்று கூறிய நீதிமன்றம் உடனடியாக அது ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று பணித்துள்ளது.


அசல் 22 கரட் தங்க நகைகளை
ஓடர் கொடுத்து குறித்த தவணையில்
பெற்றுக் கொள்ள யாழ் நகரில்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

இந்திரா நகையகம்

181 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:

ரக்ஷனா ஜுவல்லறி
இல 171, செட்டியார் தெரு
கொழும்பு 11

கௌரி அழகு மாடம்

- அழகு சாதனப் பொருட்கள்
- எவர் சில்வர், அலுமினியம், பிளாஸ்ரிக் பாத்திரங்கள்
- தையல் வேலைகளுக்கு தேவையான லேஸ், நூல், இலாஸ்டிக் வகைகள்
- பாடசாலை பை வகைகள்
- குமிழ் முனை, போல்ட் பொயின் பேனைகள்

எத்தனை எத்தனையோ
அத்தனையையும் மொத்தமாக
நிதான விலையில் பெற்றிட
நாட வேண்டிய இடம்

கௌரி அழகு மாடம்

361, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

கபிலா
காலணி அகம்

BATA
D.S.I
RANPA
SEEDA

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து
காலணி வகைகளையும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தேவை

- அச்சுக்கோப்பவர்கள் (ஆண் - பெண்)
- யந்திர இயக்குனர்கள்

நேரில் வரவும்:

சூரிய காந்தி
68/1, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

சரளமான நடையில் மெலிதான நகைச்சுவையுடன் எத்தகைய சிக்கலான விஷயத்தையும் தெளிவாக்குவதில் வல்லவர் காஞ்சிப் பெரியவர்! ஆசாரம், சீலம், குண நலம், பேரறிவு அத்தனையும் வாய்க்கப்பெற்று பல கோடி மக்களின் ஆத்ம லாபத்துக்கு வழி காட்டியவர்! நூற்றியொரு வயதுவரை வாழ்ந்தவர்!

# எழுத்தாளர் கடமை

## காஞ்சிப் பெரியவர்

சூட்சுமமான தத்துவங்களையும், சிரமசாத்தியமான சடங்குகளையும் சொல்கிற வேதங்களை நான்காகப் பிரித்து, நான்கு சிஷ்யர்களுக்குப் போதித்தார் வியாஸர்.

அந்தச் சூட்சுமங்களைப் புரிந்துகொண்டு, வேதம் விதிக்கிற யக்ஞ அனுஷ்டானங்களை ஏராளமான கட்டுப்பாடுகளுக்கு உட்படடுச் செய்யக்கூடிய ஒரு சிலருக்கு, இந்த நாலு சிஷ்யர்கள் வேதங்களைப் போதித்தார்கள்.

வேதங்களை இவ்வாறு வகுத்துப் பரப்பிய அதே வியாசர், அதே வேதங்களின் பரம தாத்பரியத்தைச் சிலருக்கு மட்டுமின்றி அனைவருக்கும் ரஞ்சகமான புராணங்களாக இயற்றினார்.

இவற்றைப் பொது ஜனங்களுக்கெல்லாம் பிரசாரம் செய்கிற பணியை, சூதர் என்பவரிடம் ஒப்புவித்தார்.

புராணங்களைப் பிரசாரம் செய்து கொண்டேயிருந்தால், அவர் சூத பௌராணிகர் என்றே பெயர் பெற்றார்.

இவர் அப்பிராமணராக இருந்தும், பெரிய பெரிய பிரம்ம ரிஷிகளெல்லாம் இவரை உயர்ந்த ஸ்தானத்தில் அமர்த்தி, நிரம்ப மரியாதை செய்து, இந்தப் புராணங்களைக் கேட்டார்கள்.

வேதத்தில் ''ஸத்யம்வத'' என்று ஒரு விதி இருக்கும். அந்த விதியை கதா ரூபமாக்கி ஜனங்கள யாவரும் ஏற்குமாறு செய்கிறது அரிச்சந்திரன் வரலாறு. ''தர்மம் சர'' என்கிற வேதத்தின் சட்டத்துக்கு மகாபாரதம் முழுவதும் விளக்கமாகிறது. ''மாத்ரு தேவோ பவ'' ''பித்ருகு தேவோ பவ'' என்கிற வேத வாக்கியங்களுக்கு ஸ்ரீ ராமனின் சரித்திரம் அற்புதமான பாஷ்யமாக இருக்கிறது.

ஆத்ம அபிவிருத்திக்காக வேதத்தில் சொல்யிருக்கிற சூக்குமமான தத்துவங்கள் எல்லாம் இப்படிப் பொது ஜனங்கள் எல்லோருக்கும் பௌராணிகரால் கதைகளாகப் பிரசாரம் செய்யப்பட்டன.

தொன்று தொட்டு பௌராணிகர்களின் பிரவசனங்கள் நம் தேசத்தில் எங்கு பார்த்தாலும் நடந்து வந்திருக்கின்றன.

கல்வெட்டுக்களைப் பார்த்தால் கோயில்களிலெல்லாம் புராணப் பிரவசனமும், குறிப்பாக பாரதப் பிரசங்கம் நடந்து வத்திருப்பது தெரியும். நித்திய பூசை போலவே புராண பிரவசனமும் கோயில்களில் அன்றாடம் நடக்க வேண்டும் என்று மானியங்கள் விட்டிருக்கிறார்கள்.

ஆலயத்தில் வழிபட்டும்' புராணங்களைச் சிரவணம் செய்துமே சமீப காலம் வரையில் நம்முடைய பொதுஜனங்கள் சூதுவாதில்லாமல் யோக்கியர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இக்கால நோக்கின்படி, அவர்களுக்கு எழுத்தறிவு இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் நல்ல பண்பு படைத்திருந்தார்கள் என்பதைப் பார்த்தால் அவர்களை வாஸ்தவமாகக் கல்வி பெற்றவர்கள் என்று சொல்ல வேண்டும்.



அச்சு யந்திரம் கண்டு பிடிக்கும் வரையில் எல்லாக் கல்வியும் வாய் மொழியாகச் சொல்லி காது வழியாகக் கேட்டே வழிவழியாக வளர்ந்து வந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் பனை ஓலையில் எழுதுகிற தேர்ச்சி பெற்றவர்கள். சிலரே இருந்தார்கள். மற்றபடி, பெரிய வேத வேதாந்தம் தெரிந்தவர்கள் கூட எல்லாம் செவிவழியேதான் கேடறிந்தார்கள்.

அச்சு யந்திரம் வந்தது. அப்புறம் நிறையப் புத்தகங்கள், நியூஸ் பேப்பர்கள் ஏற்பட்டுவிட்டன. பௌராணிகர்களின் இடத்தை இவை பிடித்துக்கொண்டன.

எனவே -

பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும்தான் இன்றைய பௌராணிகர்கள்.

சூதரும் மற்ற பௌராணிகர்களும் எப்படித் தர்மங்களை ரஸமான கதைகள் மூலம் பொதுஜனங்களிடையே பிரசாரம் செய்தார்களோ, அவ்விதமே செய்யவேண்டியது இன்றைய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை.

ஜனங்களுக்கு பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக்கூடாது.

அவர்களின் அறிவை, மனதை உயர்த்துகிற விஷயங்களையே எழுதவேண்டும். இதைச் சுவாரசியமாகச் செய்யவேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப் புது விதங்களில் உணர்த்த வேண்டும்.

பத்திரிகைக்காரர்கள் வாழ் நாள் முழுதும் மாணாக்கர்களாகவே இருந்தால்தான், தாங்களும் இப்படிப் புதுப்புது விஷயங்களை அறிந்து, மற்றவர்களுக்கும் பிரசாரம் செய்ய முடியும்.

சத்தியத்தை சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தரவேண்டும்.

சர்க்கரைப் பூச்சுத்தானே ஒழிய, முழுக்கவும் சர்க்கரையாகிவிடக்கூடாது. வெறும் சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாச்சாரங்களில் தான் ஜனங்களுக்கு அதில் கவர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இவ்விதமே எழுதுவது சரியல்ல

ஜனங்களுக்கு ஆத்மாபிவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்கு இதயபூர்வமாக எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் முனைந்தால், தானாகவே ஜனங்களுக்கு அதில் ருசி பிறக்கும்.

''நம்மையும் உயர்த்திக் கொண்டு நம் வாசகர்களையும் நாம் உயர்த்தவேண்டும்'' என்கிற கடமை உணர்ச்சியைப் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் பெற வேண்டும்.

இவ்விதம் ஆத்மக்ஷேமம், லோகக்ஷேமம், சாந்தி, சுபிட்சம் எல்லாவற்றிற்கும் மெய்யானசேவை செய்கிற பாக்கியத்தைப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பெற வேண்டும்.

(''அருள் உரை'' நூலிலிருந்து)

இரண்டு உலகப் போர்களில் பலமான அடிவாங்கிய ஜெர்மனி இன்று அசாதாரண பலத்துடன் வளர்ந்து இருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் இணைத்து 'ஐரோப்பிய யூனியன்' என்ற அமைப்பை உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள வெற்றியும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வெகு விரைவிலேயே ''யூரோ டொல்லா'' என்ற ஒரே நாணயம் புழக்கத்திற்கு வர இருப்பது எதிர் காலத்தில் மிகப்பெருத்த மாற்றங்களைக் கொண்டுவரப் போகின்றன.

# பொருளாதார முன்னேற்றம் தான் வளர்ச்சிக்கு வழி

- 'மீரா'

புதிய ஐரோப்பாவை உருவாக்குகிறது புதிய பலம் பெற்ற ஜெர்மனி.

சரித்திரத்தில் ஒரு பெரிய மாறுதல் நிகழ்ந்து இருக்கியது.

ஜெர்மனி பலம் பெறும் போதெல்லாம் பக்கத்து நாடுகள பயப்படுவது வழக்கம்.

ஆனால் -

இப்போது ஜெர்மனி நன்கு பலமான நாடாகி விட்டபோதிலும் அதன் பக்கத்து நாடுகள் பயப்படவில்லை. காரணம்- ஜெர்மன் நாட்டுத் தலைவர் ஹெல்மட் கோலின் அற்புதமான அணுகுமுறைகள்,

ஜெர்மனி பலம் பெற்றதனால் உண்டாகிய முதலாவது உலக யுத்தமும் இரண்டாவது உலக யுத்தமும மிகப் பயங்கரமான விளைவுகளை உலகம் பூராவுமே உண்டாக்கின. அந்த நாட்களில் தனது பக்கத்து நாடுகளுக்கு ஜெர்மனி விளைவித்த நாசம் மிகப்பெரிது.

தனது எல்லைகளை விஸ்தரிக்கவேண்டும் என்பது, ஐரோப்பாவை முழுவதுமே கட்டி ஆளவேண்டும் என்பது ஜெர்மனியின் ரத்தத்திலேயே ஊறிப்போன சங்கதிகள் என்பது பழைய கணக்கு.

நாட்டின் எல்லைகளை விஸ்தரிப்பதில் ஜெர்மனியை ஆட்சி செய்த ஹிட்லர் கட்டிய பேராசையும், அதன் காரணமாக நிகழ்ந்த அடக்குமுறை சித்திரவதை கொடுமைகளும் உலக வரலாற்றில் யாருமே மறந்துவிட முடியாத பயங்கர நிகழ்வுகள்!

மற்றைய நாடுகளை கட்டி ஆளக்கிளம்பிய ஜெர்மனி -

அதன் முதுகெலும்பு முறிக்கப்பட்டதைக் கண்டதுதான் இரண்டு உலகப்போர்களின் வரலாறு!

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஜெர்மனி இரண்டு நாடுகளாகப் பிளவுண்டது. ஒன்று கிழக்கு ஜெர்மனி என்றும் மற்றையது மேற்கு ஜெர்மனி என்றும் பெயர் பெற்றன.

கிழக்கு ஜெர்மனி சோவியத் அரசின் ஆதிக்கத்தின் கீழ் கம்யூனிஸ்ட் ராஜ்யம் ஆயிற்று, மேற்கு ஜெர்மனி அமெரிக்காவின் செல்வாக்கின் கீழ் வந்தது.

இரண்டு நாடுகளிலும் இரு வேறு பொருளாதார அமைப்புக்கள் உருவாகின.

யுத்தம் முடிவுற்று பல காலத்தின் பின்னரும் மேற்கு ஜெர்மனி தனது ''வெளிநாட்டு அமைச்சை'' உருவாக்கக்கூட அமெரிக்கா அனுமதிக்கவில்லை.

ஜெர்மனி விஷயத்தில் அவ்வளவு பயம்!

போருக்குப் பின் மேற்கு ஜெர்மனியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கொன்ராட் அடினாருக்கு அதிக தெரிவுகளோ, வாய்ப்புக்களோ இருக்கவில்லை. ஆனால் மிகுந்த பொறுமையுடனும் சிறந்த புத்திசாலித்தனத்துடனும் அவர் செயல்பட்டார்.

அவர் தலைமை வகித்த மேற்கு ஜெர்மனி - சரித்திரத்திலேயே ''மிகச் சிறிய'' ஜெர்மனியாக இருந்தபோதிலும் - மிகவும் வளமான நாடாகம் உருவாகிற்று.

மிகச் சிறந்த பொருளாதாரக் கொள்கையை அவர் கடைப்பிடித்தார்.

சுதந்திரமான பொருளாதாரமும், கட்டுப்பாடற்ற வர்த்தகமும், லைசென்ஸ் பர்மிட் என்பன இல்லாதிருப்பதும், தொழில்துறை வளர்ச்சிக்கான ஊக்குவிப்பும்தான் வளர்ச்சிக்கு வழி என்பதை அவர் நடைமுறையில் செயற்படுத்திக் காட்டினார்.

பலப்பல சந்ததிகளாக ஜெர்மனியர்களின் உள்ளங்களில் நிலவி வந்த கேள்விக்கும் அடினார் ஒரு முடிவு கண்டார்.

ஐரோப்பா முழுவதையும் ஒரே ஜெர்மனியின் கீழ் கொண்டு வருவதா அல்லது பக்கத்து நாடுகள் பயப்படாத வகையில் ஒரு சமாதான சகவாழ்வுக் கொள்கையை கடைப்பிடிப்பதா என்ற கேள்விக்குத்தான் அவர் காலத்தில் முடிவு ஏற்பட்டது.

நாடு பிடிக்கும் ஆசையும், போர் வெறியும் நாட்டுக்கு நாசத்தையே தரும் என்பதை அவர் மிகத் தெளிவாகவே உணர்ந்தார்.

எல்லா நாடுகளுடனுமே சமாதான சகவாழ்வு, ஜனநாயக பண்புகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் மதிப்புக்கொடுத்தல், சுதந்திரமான பொருளாதாரத்தை கட்டி வளர்த்தல் என்பனவே அவரது கொள்கைகளாக இருந்தன.

இந்தக் கொள்கைகள் தான் மேற்கு ஜெர்மனியின் மின்னல் வேக வளர்ச்சிக்கும் காரணம் ஆயின.

சென்ற 1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜெர்மனியின் தலைவராகப் பதவிக்கு வந்தவர் ஹெல்மட்கோல்.

இவர் கடைப்பிடித்து வரும் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளினால், ஜெர்மனியின் முன்னேற்றம் அதிசயிக்கத்தக்க முறையில், அபாரமானதாக இருந்து வருகிறது.

இவர் பதவிக்குவந்த போது இவரை ''நாட்டுப் பூசணிக்காய்'' என்று பலரும் நையாண்டி செய்தார்கள்.

ஜெர்மன் மொழியை விட வேறு எந்த மொழியும் இவருக்குத் தெரியாது.

சற்று ஆஜானுபாகுவான சரீரம். ஒரு மாதிரி திக்கித் திணறிப் பேசும் சுபாவம் சாப்பாட்டில் ரசிகத் தன்மையுடன் கூடிய பிரியம். - இப்படித்தான் பலரது கண்ணிலும் ஹெல்மட்கோல் தோற்றம் தந்தார்.

ஆனால்-

இவரது தலைமையின் கீழ் தான் அந்த நாடு வளர்ச்சிக்கு மேல் வளர்ச்சியாக அற்புதமான சாதனைகளைப் புரியத் தொடங்கியது. இமாலய சாதனைகளுக்கு வழி ஏற்பட்டது. உலக பொருளாதாரத்தில் மூன்றாவது ஸ்தானத்துக்கு உயர்ந்தது. செல்லம் கொழித்தது.

மேற்கு ஜெர்மனி அபாரமான சாதனைகளைப் புரிந்து கொண்டிருந்த அதே நேரத்தில்-

கம்யூனிஸ் ராஜ்யமாக இருந்த கிழக்கு ஜெர்மனி பல சிக்கல்களையும், தொழில்துறை வீழ்ச்சியையும், பொருளாதார சரிவையும் சந்திக்க நேர்ந்தது.

கிழக்கு ஜேர்மன் மக்கள் கம்யூனிஸ்ட் ஆட்சியிலிருந்து விடுபட்டு மேற்கு ஜெர்மனிக்குள் தஞ்சம் புகத் தொடங்கினார்கள். கடைசியில் கிழக்கு ஜெர்மன் ராஜ்யம் முழுவதுமே மேற்கு ஜெர்மனியுடன் சேரத் துடித்தது. 1990ல் கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் இணைந்து ஒரே ராஜ்யம் ஆயின.

இந்த இணைப்பின் காரணமாகவும் பல புதிய பிரச்சினைகளை ஹெல்மட்கோல் சந்திக்க நேர்ந்தது. அத்தனை பிரச்சினைகளையும் மிகவும் சாதுரியமாக ஹெல்மட்கோல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

ஈராக் வசம் பயங்கர உயிரியல் இரசாயன ஆயுங்தகள் உள்ளதாகவும் அவற்றைச் சோதனையிட ஐ. நா. அதிகாரிகளை ஈராக் அனுமதிக்கவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்திய விஷயம் நம் எல்லோருக்கும் தெரியும். இந்த உயிரியல் இரசாயன ஆயுதங்கள் மிக்க கொடுமையானவை ....

# இரசாயன உயிரியல் ஆயுதங்கள் ஏற்படுத்தும் பயங்கரங்கள்

குர்டிஸ் மக்களுக்கு எதிராக ஈராக்கிய அதிபர் சதாம் உசைன், இரசாயன ஆயுதங்களை உபயோகித்து நூற்றுக் கணக்கானோரைக் கொன்று விட்டதாக 1988-ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது!

இன்றும் சீனா, லிபியா வடகொரியா உட்பட சுமார் பதினாறு நாடுகள் இது போன்ற தடை செய்யப்பட்ட நச்சு ஆயுத உற்பத்தியில் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றன. கடந்த 95-ல் ஜப்பானில் ஓம்ஷின்றிக்யோ என்னும் பயங்கரவாதி நரம்பு வாயுவின்மூலம் பத்துக்கும் அதிகமான பொதுமக்களைக் கொன்ற சம்பவம் நினைவிருக்கின்றதல்லவா? அது, இரகசிய உயிர்க்கொல்லி ஆயுதங்களின் தயாரிப்பு இரகசியம் தனிப்பட்ட பயங்கரவாதிகளின் கைகள்வரை போய்விட்டதற்கு ஓர் அடையாளம் என்று அஞ்சப்படுகின்றது.

இரசாயன ஆயுதங்களின் பிரயோகம் முதலாம் உலகப் போரினை ஒட்டியே உருவானதாகும். அப்போது குளோரின் மற்றும் மஸ்டார்ட் வாயுக்கள் போர் முனைகளில் பங்காற்றி வந்தன.

ஆனால் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாவதற்குச் சில வருடங்கள் இருக்கையில் ஏற்கனவே உபயோகத்தில் இருந்த இரசாயன ஆயுதங்களைவிடவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களை நாடி ஜெர்மனிய இராணுவத்துறை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டது.

1936ம் வருடம் கெர்காட் ஷிராடெர் என்பவரது மூளையில் புதிய நச்சு வாயுவொன்றை ஆயுதமாக உபயாகிக்க முடியும் என்றும் அபார(?) சிந்தனை உதித்தது! நரம்பு வாயு எனப்படும் நெர்வ் கேஸ் இவரது ஆராய்ச்சிகளின் விளைவாம் அறிமுகமானது தான். சாரின், விஎக்ஸ் என்னும் பெயர்களில் உலாவரும் அதிபயங்கர ஆயுதங்களின் தோற்றமும் இதிலிருந்து ஆரம்பமானது.

சாதாரண குளோரின் வாயுவை விட நூறு மடங்கு முதல் ஆயிரம் மடங்கு வரையிலான நச்சுத்தன்மை கொண்ட இந்த நரம்புவாயுக்கள் உடலின் தசைகளுக்கு மூளை இடும் கட்டளைகளை எடுத்துச் செல்லும். நரம்புகளை செயலிழக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. தசையின் இயக்கத்துக்கு வேண்டிய என்ஸைம்களின் உற்பத்தியை முற்றாக அழித்துவிடும் இவ்வாயு உதரவிதானத்தை இறுக்கமடையச் செய்வதன் மூலம் மூச்சுத் திணறலை ஏற்படுத்தி மரணத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றது. சாரின் மற்றும் விஎக்ஸ் ஆகியன சருமத்தின் உள்ளே ஊடுருவித் தாக்கும் திறன் படைத்ததாக விளங்குகின்றன. அதே சமயம் இவற்றை உற்பத்தி செய்ய உபயோகமாகும் பொருட்களை இறுதி நேரம் வரை தனித்தனியே பிரித்து வைத்திருக்க முடியுமாகையால் அபாயமின்றி இதனை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்துக்கு கொண்டு செல்வது சுலபம்.

இரசாயண ஆயுதங்களைப் போன்று உயிரியல் ஆயுதங்கள் உடனடி பாதிப்புகளை உருவாக்குவதில்லை. ஆனால் உயிரியல் ஆயுதங்களால் உண்டாகும் பாதிப்பு பல எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கக் காரணமாகியுள்ளன. சில ''கிராம்'' எடைகொண்ட உயிரியல் நச்சுப் பொருள் மூலம் ஏற்படும் அழிவு ஒரு டன் ''நரம்பு வாயுவினால்'' உண்டாகும் அழிவை விடவும் பல மடங்கு அதிகமாக இருக்கும் எனக் கண்டுள்ளனர்.

ஒரு டெஸ்ட் டியூப்பில் அடைக்கப்பட்டிருக்கும் பயங்கர உயிரியல் ஆயுதத்தால் பல்லாயிரம் மக்கள் மட்டுமின்றி அது பிரயோகிக்கப்பட்ட பிரதேசத்தின் உயிர் வாழ்க்கையையே பல வருடங்களுக்கு மாற்றியமைத்து வி.. முடியும்.

இவ்வுயிர் ஆயுதங்களினால் மற்றுமோர் ஆபத்தும் உள்ளது என்கின்றார்கள் உயிரியல் ஆயுத உற்பத்திக்கான பொருட்களை ஐ. நாவின் போராயுத நிபுணர்கள் வருகை தரும் சமயத்தில் மட்டும் அழித்து விட்டு அவர்களது சோதனை முயற்சிகள் யாவும் முடிவடைந்த பின்னர் ஒரு வார காலத்தில் மீண்டும் உற்பத்தி செய்து விட முடியும்! இவ்வகையில் இது அணு ஆயுதங்களை விடவும கொடியதாகும் எனக் கருத்துரைக்கிறார் ஐ. நா. ஆயுதக் குழு நிபுணர் ஒருவர்.

இன்று- இராக் வசம் ஏறத்தாழ 800 லிட்டர் அன்திராக்ஸ் எனும் உயிர் கொல்லி ஆயுதமும் சுமார் 20,000 லிட்டர் பொடொக்ஸ் ஸீம் இருப்பதாக நம்பப்படுகிறது.

இவற்றுள் அன்திராக்ஸ்-சுவாசத்துடன் சேர்ந்து உள்ளிழுக்கப்படும் பயங்கர பாக்டீறியாவைக் கொண்டதாகும் இவ் வாயுவின் தாக்கம் இரண்டு முதல் நான்கு நாட்களுக்குள் வாந்தி, காய்ச்சல் தொடர்ந்து மூச்சுத் திணறலை ஏற்படுத்தி முடிவில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார முன்னேற்றம்....

சமாளித்ததைப் பார்த்து உலகமே வியந்தது.

ஆனால்-

ஹேல்மட்கோல் அத்துடன் நிற்கவில்லை.

''ஐக்கியப்பட்ட ஐரோப்பா''வுள் 'ஒரு அமைதியான ஜேர்மனி' தான் எதிர்கால வளமான வாழ்வுக்கும் அமைதிக்கும் அடிப்படை என்பதை உணர்ந்தார்.

இந்த உணர்வின் விளைவுதான் ''ஐரோப்பிய யூனியன்'' என்ற அமைப்பின் பிறப்புக்கு காரணம்.

'ஐரோப்பிய யூனியன்' இப்போது செயற்படத் தொடங்கியிருக்கிறது.

1982ல் பதவிக்கு வந்த ஹெல்மட் கோல் இன்னும் அந்தப் பதவியிலேயே இருக்கிறார்.

தேர்தல்களில் வெற்றி பெறுவது என்பது இவருக்கு சாதாரண விஷயம் ஆகிவிட்டது.

ஜெர்மனியில் அடுத்த தேர்தல் 1998ம் ஆண்டில் வர இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் அதிக காலம் பதவியில் இருந்த தலைவர் என்ற பெயரை ஹெல்மட் கோல் பெற்றுவிட்டார்.

1998ம் ஆண்டில் தேர்தலில் போட்டியிடுவாரேயானால் நிச்சயமாக வெற்றி இவருக்குத்தான்.

அப்படி வெற்றி பெறும் போது வரலாற்றிலேயே ''அதிக காலம் ஜெர்மனியை ஆண்டவர்'' என்ற பெயரை ''பிஸ்மார்க்'' கிடமிருந்து இவர் பெற்று விடுவார்.

இன்னும் நிறையச் சாதனைகளைப் புரியக் கூடிய வாய்ப்பும் திறமையும் இவருக்கு உள்ளன.

மெல்ல மெல்ல ''ஐரோப்பிய யூனியன்'' ஒரு 'சுமுகமான குடும்பம்' ஆகிக் கொண்டு வருகிறது.

பொருளாதாரத் துறையில் கற்பனைக்கும் எட்டாத மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வெகு விரைவில்—

'ஐரோப்பிய யூனிய'னில் அங்கம் வகிக்கும் பல்வேறு நாடுகளில் ஒரே நாணயம்- அதற்குப் பெயர் 'யூரோ டொல்லர்' என்பது புழக்கத்திற்கு வரப்போகிறது,

அரசுகள் வேறு வேறாக இருந்தாலும் ஒரே நாணயம் தான் அந்த நாடுகளின் செலாவணியில் வரபபோகிறது.

இந்த ''ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கான தனியாக இருக்கின்ற ஒரு மத்திய வங்கி தான் ''யூரோ டொல்லர்'' தனை வெளியிடுவது, அதனை நிர்வகிப்பது போன்ற வேலைகளுக்குப் பொறுப்பு!

''இது ஒரு புது வகையான அமைப்பு. சரித்திரத்தில் புதிதாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. 'ஐரோப்பிய யூனிய'னில் 'ஒரு தேசம் ஒரு வாக்கு' என்பது தான் நடைமுறை.

மக்கள் தொகையில் பெரிய நாடு மக்கள் தொகையில் சிறிய நாடு என்ற பேதமோ வளமுள்ளநாடு வளமற்றநாடு என்ற பேதமோ, செல்வந்த நாடு வறிய நாடு என்ற பேதமோ, கிடையாது.

ஜெர்மனிக்கு அதில் எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ அதே அளவு உரிமை சிறிய ஒரு நாடான பெல்ஜியத்திற்கும் இருக்கிறது.

இதன் காரணமாக-

வலிமை குறைந்த நாடுகள் வலிமை மிகுந்த நாடுகளைக் கண்டு பயப்படாமல் சந்தோஷமான ஒத்துழைப்புடன் கருமம் மாற்ற முடியும்.

''ஐரோப்பிய யூனியன்'' இப்படி ஒரு அமைப்பாகச் செயல்படும் போது பொருளாதார வளர்ச்சியில் வியக்கத்தக்க சாதனைகளைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை மிக்க வலு உள்ளதாகிறது.

ஆரம்பத்தில் பொருளாதார வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டமைப்பு -

'அமெரிக்க ஐக்கியராஜ்யம்' என்ற அமெரிக்க அரசாங்கத்தைப் போல -

வரவிருக்கும் இருபத்தியோராவது நூற்றாண்டில் ''ஐரோப்பிய ஐக்கிய ராஜ்யம்'' என்ற பெயரில் ஒரு பெரிய அரசாங்கமாக உருவெடுத்தாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

வருங்காலத்தில் இப்படி பெரிய ராஜ்யங்கள் உருவாவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாக உள்ளன!

# வ. பி. போ. சபை ஊழியர் கஷ்ட நிவாரணபடி தாமதம்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கான 1996 ஆம் ஆண்டிற்குரிய கஷ்ட நிவாரணப்படி இன்னமும் வழங்கப்படவில்லை. இது குறித்து வடபிராந்திய ஊழியர்கள் மனவேதனையதைந்துள்ளனர்.

ஏனைய அரச நிறுவனங்கள் யாவும் கஷ்ட நிவாரனப்படியை வழங்கி விட்டபோது தமக்கு மட்டும் ஏன் கஷ்ட நிவாரணப்படி வழங்கம்படவில்லையென இவர்கள் விசுவம் தெரிவித்துள்ளனர். இதேவேளை 1988 ஆம் ஆண்டிற்குப் பிறகு இவர்களுக்கு எதுவித பதவியுயர்வுகளும் வழங்கப்படவில்லையென்பதும்ம் குறிப்பிடத் தக்கது.

# பெண்களுக்கு மட்டும் மீன் பிடிக்க அனுமதி

(காரைநகர்)

பொன்னாலை பாலத்தில் மீன் பிடிப்பதற்கு காரைநகர் மீனவர்களுக்கு அனுமதியில்லை ஆனாலும் முப்பத்தாறு பெண்களுக்கு மட்டும் காரைநகர் கடற்படைதள உயர் அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

இருந்தபோதும் சுழிபுரம், அராலி, மாவடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இப்பகுதியில் மீன் பிடிப்பதாகவும் தமக்கு மட்டும் ஏன் மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டது எனவும் மீனவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# அதிகாரிகளின் போக்கால் அவதியுறும் மக்கள்

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேச பெயலர் பிரிவில் வாழ்ந்தவர்கள் மீளக்குடியமர்தல் பணம் பெறுவதில் பல்வேறு சிரமங்களையும் அடைகின்றார்கள்.

ஏற்கனவே வலி வடக்கில் கடமையாற்றிய கிராம அலுவலர்கள் பலரும் வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுளளனர்.

இந்நிலையில் தற்போது குடியிருக்கும் பகுதி கிராம அலுவலர்கள் முன்னைய கிராம அலுவலர்களிடம் கடிதம் பெற்று வரும்படி பணிக்கப்படுகின்றார்கள்.

உரிய பொதுமக்கள் முன்னைய கிராம அலுவலர்களை தேடிச் சென்றால் அங்கு அவர்கள் இல்லாததுடன் தற்காலிகமாக கடமையாற்றுபவர்களும் உரிய நபர்களைத் தெரியாது என்று கூறிக் கடிதம் வழங்க மறுத்துவிடுகின்றனர்.

பொதுமக்கள் இத்தகைய அரச ஊழியர்களின் நடவடிக்கைகளால் அலைந்து திரிகின்றார்கள். உரிய உயர் அதிகாரிகள் பொதுமக்களின் இந்தகைய நிலைமாற நடவடிக்கை எடுப்பார்களா என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

# மெய்வல்லுநர் பேட்டி

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 7-2-98 சனிக்கிழமை நாளை பி. ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர், அருட்செல்வி ஜி. செல்வராணி தலைமை தாங்க உள்ளார். பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயம் 1ன் உடற்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜாவும். சிறப்பு விருத்தினராகக் குரு முதல்வர் அருட்தந்தை ஜே, பி. ஈ. செல்வராசாவும் பங்கேற்கவுள்ளனர்.

# சங்கீத வகுப்பு

தேசிய இளைஞர் கழகங்கள் இணைந்து இளைஞர், யுவதிகளுக்கான சங்கீத, நடன, வயலின் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளன. இச் சங்கீத, நடன, வயலின் வகுப்புக்களில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாமெனவும், பயிற்சிகளைப் பெறுபவர்களுக்குப் பயிற்சியின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப் படுமென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

சில கால இடைவெளிக்குப்பின் மீண்டும்
றோணியோ
தமிழ் ஆங்கில
தட்டச்சு வேலைகள்
சிறந்த முறையில்
குறைந்த செலவில்-
குறித்த தவணையில்
செய்து கொள்ள நாடுங்கள்
தயா அச்சகம்
138 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அழகும் நவீனமும் நிறைந்த
தங்க வைர நகைகள்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
சாரங்கா
நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை ஸ்தாபனம்:
அருள்முருகன் நகை அகம்
96/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்;
சிவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.

# சூரியகாந்தி

## அலட்சியம் வேண்டாம்

நீதி மன்றங்கள் இயங்குவதை வைத்துக்கொண்டு அரசாங்கமும் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

''யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது'' என்ற பாட்டு பாடப்படுகிறது.

சில சமயங்களில் சற்று அளவுக்கு அதிகமான பக்க வாத்திய சகிதமாகவே இந்தப் பாட்டுப் பாடப்படுகிறது,

ஆனால் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஏதாவதொரு நீதி மன்றத்தைத்தானும் சென்று பார்த்த எவருக்கும் அரசாங்கம் பாடும் பாட்டு ரொம்பவும் அபஸ்வரமாக ஒலிப்பது தெரியவரும்.

கோழிக் கூடுகளுக்கு உள்ளேயும் புறாக் கூடுகளுக்கு உள்ளேயும் சீவியம் நடத்துவதற்கும் யாழ்ப்பாணத்து நீதி மன்றங்களுக்கு உள்ளே வேலை செய்வதற் கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை.

சில நாடுகளில் சட்டங்களும் விதிகளும் ரொம்பவும் இறுக்கமாகவும் நெருக்கமாகவும் இருக்கும் என்று சொல்வார்கள், ஆனால் யாழ்ப்பாணத்து நீதி மன்றங்களுக்கு உள்ளே கிடக்கும் பழைய மேசைகளும் உடைந்த முக்காலிகளும் ரொம்பவும் புராதனமாக ஆடும் நாற்காலிகளும் கூட நெருக்கமாகவும் இறுக்கமாகவும்தான் இருக்கின்றன,

நீதிமன்ற ஊழியர் ஒருவர் கள்ளிப்பெட்டிக்கு மேலே உட்கார்ந்திருந்து சில கோவைகளை கூட்டிக்கொண்டிருப்பதை பல சமயங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

நீதிமன்றம் என்பது மிகவும் கௌரவத்துக்கும் மரியாதைக்கும் உரிய ஒரு இடம். அப்படியான இடங்களுக்குரிய அடிப்படை வசதிகளைக் கூட செய்து கொடுக்காமல் அரசாங்கம் இருப்பது நல்லதல்ல.

''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார்'' என்பது மாதிரி இடைநடுவிலே இருக்கிற சிவில் உத்தியோகத்தர்கள் இந்த மாதிரியான விஷயங்களில் அக்கறை காட்டாமலும் புறக்கணிப்பதும் அவ்வளவு நல்லதல்ல.

''நீதி''யைப்பற்றி ஏனோதானோ மனப்பான்மை கொண்டவர்கள்தான் நீதிமன்றங்களைப் பற்றியும் ஒரு அலட்சிய மனப்பான்மையோடு இருக்கமுடியும்

## நேற்று இரண்டாவது நாளாக வேலைநிறுத்தம் தொடர்கிறது

தோட்டத் தொழிலாளர்களின்வேலைநிறுத்தம் நேற்று இரண்டாவது நாளாகதொடர்ந்தது சம்பள உயர்வை மையமாகவைத்து இவ்வேலை நிறுத்தம் தொடர்கின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசினால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலை நிறுத்தத்தில் நேற்று ஆறுலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். மூன்று வாரங்களில் இவ் வேலைநிறுத்தம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் இணக்கப்பாட்டிற்கு வராவிட்டால் உலகச்சந்தையில் தேயிலை விலை உச்ச நிலை அடையுமென தேயிலை வர்த்தகநாடுகள் பீதியடைந்துள்ளனர்.

பெரும் தோட்டத்தொழில் அமைச்சு இதுகுறித்துசரியான நடவடிக்கை எடுககும்வரை தோட்டத்தொழில் அமைச்சுடன் எந்தவித பேச்சுக்களையும் நடத்த தாம் தயாராக இல்லை என இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதேவேளை தாம் நேரடியாக தோட்டத்துரைமார் சங்கத்துடன் பேச்சுக்களை நடத்தப்போவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## சனசமூக நிலைய சம்மேளன கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைஎல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசக் குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 3-30 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்வன் செயல்களின் ரோது தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு தாபரிப்பு நிதி வழங்குவதற்கானவிண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் அவ்வப் பகுதி சனசமூக நிலையங்களுக்கூடாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். என யாழ். மாநகர சன சமூக நிலையங்களின் சம்மேளனச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## ஆசிரிய பயிற்சிக்கலாசாலை வெளியூர் மாணவர்கள் வருகை

(சுன்னாகம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவ்வாண்டு வெளி மாவட்ட மாணவர்களும்பயிற்சிபெற்றுவருகின்றனர். கண்டி, மட்டக்களப்பு கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே தமது பயிற்சிகளைத் தொடர்வதற்காக வந்துள்ளனர்.

இன்னும் ஒரு தொகுதி மாணவர்கள் வரவிருப்பதாகத் தெரியவருகிறது. இதேவேளைமுஸ்லீம் மாணவர்கள் சிலரும் இங்கு வருவதுபற்றி ஆலோசித்து வருவதாக மட்டக்களப்பிலிருந்து வந்துள்ள மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நீண்ட காலத்தின் பின் பலாலி ஆசிரிய் பயிற்சிக்கலாசாலையில்வடற் கல்விப்பாட நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தைப்பூசத் திருவிழா

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கு இலகடி வைரவர் கோயில் தைப்பூசத் திருவிழா எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறவுள்ளது அன்றையதினம் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

## இரசாயான.....

இறப்பைத்தழுவச் செய்யும். 'போடொக்ஸ் நரம்பு மண்டலத்தை செயலிழக்கச் செய்வதுடன், மாரடைப்பையும் ஏற்படுத்தும், 'பொட்டிலிஸம் பாக்டீரியா' மூலம் பெறப்படும் இப்பொருள் அமெரிக்காவிடமிருந்து ஈராக் பெற்றுக் கொண்ட உயிரியல் ஆயுதம்என்பதுகுறிப்பிடத்தக்கது;

ஈராக் இது போன்ற பயங்கர ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாக ஐ. நா. சொல்கிறது சதாம் ஒப்புக் கொள்வாரா என்ன . . .?!

ஃபொஸ்ஃபீன் ஆக்ஸைட் நரம்பு வாயு சாரினைப் போன்று நூறு மடங்கு வலிமை வாய்ந்தது என்று சொல்லப்படுகின்றது இது உடலை உடனடியாக உணர் விழக்கச் செய்து, சாவின் பிடியில் தள்ளிவிடும் வலிமை பெற்றதாகும். வி.எக்ஸ் எனும் பெயரில் அழைக்கப்படும் பயங்கர ஆயுதம் இது.

இவற்றின் காரணமாகவே அறிவியல் ஆய்வுகள் மூலம் ''தப்பி பிறந்த'' முரட்டுக் குழந்தைகளான இந்த உயிரியல், இரசாயன ஆயுதங்களை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதற்கு, இன்று பல நாடுகள் முயன்று கொண்டிருக்கின்றன.

## அறிமுக விழா

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதிஉயுள்ள உணர்வின் நிழல்கள் என்னும் கறுதைத்தொகுதியின் அறிமுக விழா நாளை (80.2-98 காலை 9-30 மணிக்கு பாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## பிரஜைகள் குழு தலைவர் தாக்கப்பட்டார்

காரைநகர் பிரஜைகள் குழுவின் உபதலைர் காசிப்பிளளை தவராசா என்பவரை (45 வயது) அங்குள்ள கடற்படை அதிகாரி ஒருவர் தாக்கியதாக யாழ் மாவட்ட ஈ பி டி பி பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சிவதாசனிடம் புகார் சொய்யப்பட்டுள்ளது என ஈ பி டி பி யாழ் அலுவலகம் தெரிவித்தது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் கடற்பிராந்திய கடற்ப்டை உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டதையடுத்து சம்பந்தப்பட்டவர் மீது விசாரணை நடாத்தப்படும் எனக்கூறப்பட்டது.

காசிப்பிள்ளை தவராசாவை முகாக்கு வரும்படி அழைத்து தாக்கியிதாக தெரிவிக் காப்படுகிது.

## அவசர காலச்சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றில் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 111 உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து 84 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஈ. பி. டி. பி. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தார்கள்.

ஐ. தே. க, த. வி. கூட்டணி இலங்கை முற்போக்கு முன்னணி ஆகியன பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

புளொட் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பின் போது சமூகமளிக்கவில்லை.

## சந்தை சேதம்

புத்தூர் பொதுச்சந்தைக் கட்டிடங்கள் போர்க்கால நடவடிக்கையால் முற்றாக சேதமடைந்துள்ளன. இச் ாந்தையின் ஒரு கட்டிடம் திறந்த கூரையின் கீழ் இயங்கி வருகிறது.

இதன்ால் வியாபாரிகள் கடும் வெய்யிலின் மத்தியில் வியாபாரம்செய்துவருவதைக் காணக்கூடியதாகவுள்ளதுஇச் சந்தை துப்பரவு செய்யப்படாமலிருப்பதால்சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாவும் கூறப்படுகிறது,

## பண்ணிசைப் போட்டிகள்

யாழ். மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழுவினால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வரும் பண்ணிசைப் போட்டி முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது இன்று யாழ்நகர மாணவர்களுக்காக இந்து மகளிர் கல்லூரியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் பகுதி மாணவர்களுக்காக இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

வடமராட்சிப்பகுதி மாணவர்களுக்கு 14 ஆம் திகதி வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியிலும்' தென்மராட்சி பகுதி மாணவர்களுக்கு 10ம் திகதி நடைபெறவிருந்த போட்டி 15 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நான்கு பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கானஇறுதிப்போட்டி 21 திகதி யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுவதுடன் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு மகாசிவராத்திரியன்று நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறுமெனவும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினர் அறிவித்துள்ளனர்

## கலந்துரையாடல்

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிழையின் செயற்குழுக்கூட்டம் இன்றுபிற்பகல் 3.00மணிக்கு அதன் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வெள்ளி விழா நடத்துவது பற்றியும் வெள்ளிவிழா மலர் வெளியிடு? வது பற்றியும் தீர்மானிக்கப்படும் என கிளைச்செயலாளர் அறிவித்துள்ளார்

## கனடாவில் தமிழரிடையே விவாகரத்து அதிகரிப்பு

கனடாவில் இடம்பெறும் விவாகரத்து வழக்குகள் நாற்பத்திரண்டு வீதமானவை ஈழத்தமிழர்களினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளே. இவ்வாறு கணவன் மனைவிக்கிடையிலான உறவுகள் பற்றி ஆய்வை மேற்கொண்டுவரும் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

தம்மை புதிய சூழலுக்குள் இட்டுகொள்ளவும் முடியாமல் அதேநேரம் அதிலிருந்து விலகியிருக்கவும் முடியாமல் ஈழத்தமிழர்கள் அவஸ்தைப்படுகின்றனர். இதுவே இவர்களிடையேயான விவாகரத்து அதிகரிப்புக்குக்காரணம் என அவர் தெரிவித்தார்.

# மலேரியா ஒழிப்பதில் யாழ். மாநகரசபையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மலேரியா நோய் வேகமாக பரவி வருவதினால் இதுகுறித்து பொதுமக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தும் பொருட்டு ''மலேரியாஆய்வுபட்டறை'' யொன்றை அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் நடாத்த தீர்மானித்துள்ளது.

ரிவிரச ரரணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் நோய் தாக்கத்தினால் மக்கள் பாதிக்கப்படடு வருவதாகவும் சிலவேளைகளில் மரணம் கூட ஏற்படும் நிலைக்கு இந்நோய் இன்று யாழ். குடாநாட்டுல் வியாபித்து இருப்பதன் காரணம் இவ் ஆய்வுபட்டறையை அரசசார்பற்ற இணையம் மேற்கொண்டுள்ளுகிறது.

இந்நோய்க்கான முக்சிய காரணியாக திகழும் நுளம்புகளை ஒழிப்பதற்கு கிராம மட்டத்திலும் வீட்டுமட்டத்திலான நடவடிக்கைகள மக்கள் மேற்கொள்ளும் பொருட்டுமக்களுக்கு போதிய விழிப்பை ஏற்படுத்தும் வகையில் இப்பட்டறை அமையும் என அரசசார்பற்ற இணையங்களின் பிரதி நிதி தெரிவித்தார்.

இப்பட்டறை தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவ பிரிவு தலைவர் டாக்டர் என்சிவராசாவுடன் இதுகுறித்று ஆராயப்பட்டதாகவும் இப்பட்டறைக்கு பல்கலைக்ழழக மற்றும் வைத்தியசாலை வட்டாரங்களின் பூரண ஒத்துழைப்பு தமக்கு கிடைக்கும் என தாம் எதிர் பார்ப்பதாகவும் அப்பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளையாழ் மாநர்ப்கபுறத்தில்நுளபுத் த்தொல்லை ஒழிப்புத்திட்டம் ஒன்றை எதிர்வரும் திங்கள் முதல் யாழ். நாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் மேற்கொண்டுள்ளார்.

வீடு வீடாக யாழ்: மாநகர சபை சுகாதார பிரிவு ஊழியர் சென்று மலேரியா நோய் தாக்கம் குறித்து விளக்கங்களை கொடுப்பதுடன் மலத்தியோன் தெளிக்கும நடவடிக்கைகளிலும் நீர்த்தேக்கங்களிலும் நுளம்புகுடம்பிகளை ஒழிப்பதற்கான மருந்தும் தெளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படஇருப்பதாக யாழ் மாநகரசபை வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்படும் சமயத்தில் நோய் பரம்பலைத்தடுக்க மருந்துகள் கொடுக்கவும் சுகாதாரஉத்தியோகத்தர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் குறிபிடப்பட் நதிவடிக்கைக்கு மக்கள் பூரணமான ஒத்துழைப்பை நல்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை யாழ்போதனா வைத்தியசாலைவெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற விரும்புவோர்களில் நாற்பது சதவிகிதத்தினருக்குமலேரியா நோய்க்கான மருந்து வழங்கப்படுவதாகவும், இரத்தம் பரிசோதனை மேற்கொள்ளும போது நூற்றுக்கு மேற்பட்டவர்கள்மலேரியா தாக்கத்திற்கு உட்பட்டடுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புக்கு சவால் தாக்குதல் நோக்கம்

ஐம்பதாவது சுதந்திர விழா நிகழ்வு நிறைவு பெற்று விசேட விருந்தினர் நாட்டை விட்டு வெளியேறிய சிலமணி நேரத்தில் கொழும்பு மத்தியில் பாதுகாப்பு கெடுபிடிக்கு சவாலாக தற்கொலை குண்டு தாக்குதல் நடைபெற்றுள்ளதாக பி.பி.ஸி. தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

இத்தற்கொலை தாக்குதல் தாரியின் இலக்கு எதுவாக இருந்தாலும் கொழும் பாதுகாப்புக்கு சவால்விடும் வகையில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் எனவே இதுபோன்ற தாக்குதல்கள் எந்த நிலையிலும் நடக்கும் என்பதை இத்தாக்குதல் அரசாங்கத்திற்கு உணர்த்தி இருப்பதாகவும்மேலும் தெரிவித்துள்ளது.

## குண்டுதாக்குதலினால் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

குண்டுத்தாக்குதல் நடைபெற்ற ஒரு சில நிமிடங்களின் கொம்பனிதெரு பகுதியில் தமிழர் நெரிசலாக வதியும் பகுதிகளுக்கு இராணுவமும் பொலிசாரும் கூட்டு சோதனை மேற்கொண்டதாகவும் வீடுகளில் பரந்த சோதனை மேற்கொள்ளபட்டதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல்

(கொழும்பு)

பாதுகாப்பு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிக்கு மத்தியிலே நேற்றுமாலை குண்டு தாக்குதல் நடந்துள்ளது.

விமானப்படை தலமை அலுவலகம், விமானப்படை அதிகாரி தங்கும் இடம் இராணுவ முகாம்கள், இராணுவ வாகன பொறியியல் பிரிவு தலைமை அலுவலகம், கொம்பனிதெரு பொலிஸ் நிலையம் இராணுவ உயர் அதிகாரி ''மெஸ்'', பொலிஸ் உயர அதிகாரிகளுக்கான ''மஸ்'' இப்பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இறைவரி திணைக்கள தலமை அலுவலகம் மின்சாரசபை தலைமை அலுவலகம், எழுதுவினைஞர் சங்க அலுவலகம் மக்கள் வங்கி தலைமை அலுவலகம், லேக்ஹவுஸ் புத்தகசாலை, இந்து இளைஞர்சங்க தலைமை கட்டிடம் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குண்டுவெடிப்பையடுத்து வாகனங்கள் திருப்பப்பட்டன

(கொழும்பு)

சன நெரிசல் அதிகரித்த நேரத்தில் குண்டு தாக்குதல் நடைபெற்றதால் மக்கள் செய்வது என்னவென்று அறியாமல் ஓட்டமும் நடையுமாக அப்பகுதியை விட்டு வெளியேறினார்கள்.

'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்திற்கும், கொம்பனித்தெரு சந்திக்கும்இடைப்பட்ட பகுதிகளின் திணைக்களங்கள், சினிமா கொட்டகைகள், தனியார் மற்றும் அரசநிறுவனங்களின்தொழில் கூடம் காணப்பட்ட பகுதியாக இருந்தமையினால் வேலைவிட்டு தமது வீடுகளை நோக்கிசென்றுகொண்டிருந்த மக்கள் மிகுந்த பயத்தின் மத்தியில் வீடு திரும்பினர்.

இதேவேளை மேற்படிபகுதி ஊடாக போக்குவரத்துதடை செய்யப்பட்டதால்இப்பாதையூடாகசெல்லும் வாகனங்கள் காலிமுகத்திடல்பகுதியாலும் டாலி வீதியூடாக திருப்பப்பட்டன. திடீரென ஏற்பட்டதால் பஸ்வண்டிக்குகூட மக்கள் காத்துநிற்காமல் ஓட்டமும் நடையுமாக வேறுபாதையூடாக சென்றனர்.

## பாதைதிறக்கக்கோரி மகஜர்

(சுன்னாகம்)

சுன்னாகம் முருகேசு பண்டிதர் வீதியைத்திறந்து விடுமாறு அப்பகுதி மக்கள் பிரதேச இராணுவ அதிகாரியிடமும் வலிதெற்கு பிரதேச செயலரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர் இப்பகுதிமக்கள் சார்பில் சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தினர் இக்கோரிக்கை அடங்கிய மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இடடாளத மூடப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வாழும் மக்கள் நீண்டதூரம் சென்றே பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது தற்போது பாவிக்கப்படும் மின் உற்பத்தி நிலையப்பாதை மின் விநியோகம் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் மூடப்படும் எனவும் இதனால் இப்பகுதி மக்கள் பாதை அற்றநிலைக்கே தள்ளப்படுவார்கள் எனவும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வாகனத்தைத்தேடி பொலிஸார் வேட்டை

(கொழும்பு)

குண்டுதாரி வந்தாககருதப்படும் ''ஹஏஸ்'' வாகனம் குறித்து விசாரணைகளை பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்துவருசின்றனர்.

இந்த ''ஹஏஸ்'' வாகனம் பாருடையது இதன் உரிமையாளர் யார்? இத்தற்கொலை துண்டுதாக்குதல் நடத்திய பெண் இவ்வாகனத்தில் எங்கிருந்து பயணம் செய்தார் போன்ற விசாரணைகளை பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

இதேவேளை இவ்வாகனத்தில் தற்கொலை தாக்குதல் மேற்கொண்ட பெண்பயணம் செய்தார் என்பதற்கு கண்ணால் கண்டசாட்சிகள் எதுவும் இதுவரை பொலிஸாருக்குகிடைக்கவில்லை எனவே இது குறுத்து தீவிரமாகவிசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### விமான...

இருந்த பாதுகாப்பினூடே இத தற்கொலை தாரி எவ்வாறு நடமாடினார் என்பது குறித்து பாதுகபப்பு பிரிவினர் இடையே அதிர்ச்சி அலை ஏற்பட்டுள்ளது.

### தற்கொலை...

திஸாநாயக்கா இக்கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்பாதுகாப்பு சோதனை சாவடிகளினால் அப்பாவி பொதுமக்களுக்கு பாதிப்பும், இடைஞ்சலுமே மிஞ்சும் தவிர தாக்குதல் நடத்ததிட்டமிட்ட நபருக்கு எந்தவித தங்குதடையும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

### பஞ்சாபி...

மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை மேற்படி காவல் அரணுக்கு வந்த 58-2936 என்ற ஹஏஸ் வானில் இப்பெண் வந்ததாகவும் காவல் அரணில் மேற்படி பெண் சோதனைக்காக அழைக்கப்பட்டதாகவும் இவர் சோதனைக்குச் செல்லும்போதுதன்னைசோதனை செய்த பெண் இராணுவ சிப்பாயைக் கட்டிப்பிடிதது தன் மீது இருந்தகுண்டைவெடிக்க வைத்தாக பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

## அரசுக்கு எதிராக வழக்கு ம. ஐ. முன்னணி முடிவு

அரசியமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசு சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த தீர்மானித்தால் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

தமது கட்சி இதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை உள்நாட்டு வெளிநாட்டுச்சட்ட வல்லுநர்களிடமிருந்து பெற்றுள்ளதாக ம. ஐ. மு. தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதே சமயம் வட - கிழக்கில் நிலவும் இனப்பிரச்னைக்குத் தீர்வாகவுமும் இந்த யுகத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்திலான புதிய அரசியலமப் பொன்றைத் தயாரிக்கும் முயற்சியில் ம. ஐ. மூன்னணி ஈடுபட்டுள்ளது.

## கோரவிபத்தில் முப்பது சிறுவர் பலி!

இந்தியாவின் மத்திய பிரதேசமாநிலத்தில் ஷிவான்என்னும் இடத்திற்கருகே சிறுவர்களை ஏற்றிகொண்டு சென்ற டிரக்டர் வண்டியொன்று பாலத்தில் இருந்து கீழே ஆற்றுக்குள் வீழ்ந்து மூழ்கியதில் முப்பது சிறுவர்கள் பலியானார்கள் டிரக்டரின் பெட்டியுடன் ட்றக்வண்டியொன்று மோதியபோதே இவ்விபத்துச் சம்பவம் நடந்தது விபத்து நடந்தவுடன் ஸ்தலத்தில் இருந்து ஓடிமறைந்த ட்றக் வண்டி பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு சாரதியும் கைது செய்யப்பட்டார் டிரக்டரும் இழுவைப் பெட்டியும் பாரந்தூக்கியின் உதவியுடன் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டன பலியான சிறுவர்கள் திருமண வைபவம் ஒன்றில் கலந்து விட்டுத்திரும்பிக்கொண்டிருந்தபோதே இக்கோரவிபத்து நடந்ததாககூறப்படுகின்றது.

## ஏழாலையில் துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் ஒருவர் சுடடுக்கொல்லப்பட்டார் பனிப்புலம் குப்பிளானைச்சேர்ந்த 50 வயதுடைய கனகசுந்தரம்நாகராசா என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார் இவரின்சடலம் நேற்றுக் காலை 11-45 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணும் பொருட்டு கொண்டுவரப்பட்டது. இவரது சடலத்தை இவரது குடும்பத்தினர் அடையாளம் காட்டினர்.

## லக்பிம மீதான வழக்கு தள்ளுபடி

ஜனாதிபதியின் பெயருக்கு களங்கம்ஏற்படுத்தும்வகையில் செய்தியைச் வெளியிட்டர்எ என்றுகூறி சட்டமாதினைக்களம் (லக்பிமா) பத்திரிகை ஆசிரியர் பந்துல பத்மகுமாரவுக்கு' எதிராகத் தொடுக்கப்பட்டவழக்கை கொழும்பு மேல்நீதி மன்ற நீதிபதி, ஷீராணி திலவர்த்தி தள்ளுபடி செய்துள்ளார்.

## ஆயிரம் ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

இட நெருக்கடி காரணமாக பரிசுப் போட்டி முடிவு இன்று வெளியிட முடியவில்லை. நாளை வெளிவரும் தாமதத்திற்கு மன்னிக்கவும்.

ஆசிரியர்

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 7ம் தேதி 66, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் ''; முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரகுவாமி.